DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

STC.No. 528/2024 Crime No. Station

| Name | PW-1- ராஜு | Village | |
|---|---|---|---|
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 05.05.2025 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் புன்னத்தில் குடியிருந்து கொண்டு வாட்ச்மேன் வேலை செய்து வருகிறேன். தேதி மாதம் நினைவில்லை, கடந்த 1 ஆண்டிற்கு முன்பு ஒருநாள் காலையில் சுமார் 05-45 மணியளவில் சேர்வராயன்பாளையத்தில் பஸ்ஸிலிருந்து இறங்கி பவானி-ஆப்பக்கூடல் ரோட்டில் ரோட்டின் இடது ஓரமாக எனது கம்பெனிக்கு செல்ல வேண்டி சரவணா டையிங் அருகில் நடந்து சென்று கொண்டிருந்தபோது, அதே திசையில் எனக்கு பின்னால் வந்த பைக் என் மீது மோதி விபத்து ஏற்பட்டது. விபத்தில் எனது இடது காலில் காயம் ஏற்பட்டது. விபத்து ஏற்பட்டது அதிகாலை நேரம் என்பதாலும், சரியான வெளிச்சம் இல்லாததாலும், பைக்கை ஓட்டி வந்த நபரை என்னால் சரியாக பார்க்க இயலவில்லை. பின்னர் அங்கிருந்தவர்களின் உதவியுடன் 108 ஆம்புலன்ஸ் மூலமாக சிகிச்சைக்காக பவானி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு வந்த போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் தெரியாது என்றால், சரிதான். சாதாரணமாக உங்களுக்கு கண்களில் குறைபாடு என்றால், சரியல்ல. சம்பவத்தின்போது கண்ணாடி போட்டிருந்தேனா என்றால், போட்டிருந்தேன். விபத்தானது சாலையை கடக்கும்போதுதான் நடைபெற்றது என்றால், சரிதான். உங்களின் கவனக்குறைவால்தான் விபத்து நடைபெற்றது என்றால், சரியல்ல. இவ்விபத்து குறித்து நஷ்ட ஈடு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், அதில் பணம் பெறுவதற்காக பொய்யான புகார் பெறப்பட்டது என்றால், சரியல்ல.

Taken down before me in open court
readover to the witness in the presence

of the accused pleads and admitted by
him/her to be correct

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.